## இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்

## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை

### மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை –28.06.2017

### மாநிலத்தின் கடந்தவாரவானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 29°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 30°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### 1. மேற்கு மண்டலம்

மேற்கு மண்டலப் பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 26°செ முதல் 28°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 18°செ முதல் 19°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 முதல் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14-16 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- ✓ மணிக்கு 16கி.மீக்கும் மேல் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேல் வயதுடைய வாழைகளுக்கு ஊன்று கொடுக்கவும். கரும்பில் விட்டம் கட்டவும்.
- ✓ 150 நாட்கள் வயதுடைய கரும்புக்கு தோகை உரிப்பதன் மூலம் முன் பருவ கரும்பில் துளைப்பான் பூச்சியின் தாக்கத்தை குறைக்க வேண்டும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி 40 மற்றும் 60 நாட்களுக்கு மேலான மஞ்சளுக்கு ஒரு ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 72 கிலோ பொட்டாஷ் உரங்களை மேலுரமாக இடவும்.
- ✓ வரும் நாட்களில் தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. மேலுரம் கடந்தவார மழையினை பயன்படுத்தி தென்னைமரம் ஒன்றிற்கு யூரியா 650 கிராம், சூப்பர் பாஸ்பேட் 1 கிலோ, பொட்டாஷ் 1 கிலோ மற்றும் வேப்பம்புண்ணாக்கு 2 கிலோவினை 50 கிலோ எருவுடன் கலந்து இடவும்.
- ✓ நடப்பு வானிலையில் குறும்பை உதிர்வதை தடுக்க ஒரு மரத்திற்கு 200 மிலி வீதம் TNAU தென்னை வளர்ச்சியூக்கியினை வேர்மூலம் அளிக்கவும்.

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது 35°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செமுதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 38 முதல் 75 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 8 முதல் 18 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- ✓ திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், இரண்டரை சென்ட் நிலத்தில் மேட்டுபாய் நாற்றாங்காலில் 5 கிலோ இரண்டாம் கொம்பு நெல் விதையை சீராக தூவி நாற்று விடவும். முதல் ஐந்து நாள் வரை பூவாளி உதவியுடன் நாற்றாங்கால் நன்கு நனையும்படி காலை அல்லது மாலை வேளைகளில் தண்ணீர் தெளிக்கவும்.
- ✓ குறுவை பருவத்திற்கு நாற்றாங்கால் தயார் செய்யும் போது ஒரு எக்டருக்கான 20 சென்ட் நாற்றாங்காலில் ஒரு டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். கடைசி உழவின் போது நாற்றாங்காலுக்கு 40 கிலோ டிஏபி உரம் அடியுரமாக இடவேண்டும்.

- ✓ நெல் நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு அடியுரமாக 200 கிலோ ஜிப்சம் இடவேண்டும். மேலும், மணிச்சத்திற்கு 125 கிலோ சூப்பர் பாஸ்பேட், அடியுரமாக இடவேண்டும். தழைச்சத்து மிகவும் குறைவாக இருக்கும் பட்சத்தில் ஒரு ஏக்கருக்கு 35 கிலோ யூரியா இடவேண்டும்.
- ✓ குறுவை நடவு செய்யும் பொழுது பதினெட்டு முதல் இருபத்தி இரண்டு நாட்கள் வயதுடைய நன்கு வாளிப்பான நாற்றுக்களைப் பெற்று உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் (1 கிலோ) மற்றும் பாஸ்போபாக்டீரியாவை (1 கிலோ) 40 லிட்டர் தண்ணீரில் இட்டு நாற்றுகளின் வேர் பாகம் கரைசலில் நன்கு நனையுமாறு 15 முதல் 30 நிமிடங்கள் வரை வைத்திருந்து பிறகு 20 x 10 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள, 14 நாட்கள் வயதுடைய நாற்றை குத்துக்கு ஒரு நாற்று வீதம் 25 x 25 செ.மீ. இடைவெளியில் சதுர முறை நடவு செய்ய வேண்டும்.
- ✓ பருத்தியில் காய் புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு இன்டாக்சாகார்ப் 15.8 SC 200 மி.லி என்ற அளவில் தெளிக்கவும்.
- ✓ தினமும் கறவை மாடுகளுக்கு 1-2 கிலோவும் மற்ற கால்நடைகளுக்கு 0.5-1 கிலோவும் அசோலா கொடுக்கலாம்.
- ✓ பசுந்தீவனம் மற்றும் அடர்தீவனத்தின் அளவை பகல் நேரத்தில் அதிகரித்தும், வைக்கோல் போன்ற உலர்தீவனத்தை குறைந்த அளவு அதிகாலை மற்றும் இரவு நேரங்களில் கொடுக்கவும்.
- ✓ நடவு செய்யப்பட்டுள்ள குறுவை நெற்பயிரில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த புரோபனோபாஸ் 50 இ.சி. 400 மி.லி./ ஏக்கர் அல்லது 50 சதம் நனையும் கந்தகத்தூள் 400 கிராம்/ஏக்கர் அல்லது டைக்கோபால் 600 மி.லி./ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

### 3. தெற்கு மண்டலம் -1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 34°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேரகாற்றின் ஈரப்பதம் 45 முதல் 65 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 10 முதல் 20 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் தினங்களில் மிக அதிகமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலை காரணமாக கத்திரிப் பயிரில் கண்ணாடி இறக்கை பூச்சியின் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. இப்பூச்சியை கட்டுப்படுத்த டை மீத்தோயேட் 30% EC @ 1 மி.லி. / லிட்டர் என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.

### தெற்கு மண்டலம் -2

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 28°செ முதல் 29°செ, மற்ற மாவட்டங்களில் 34°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 21°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 23°செ முதல் 26°செஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 38 முதல் 75 சதவிகிமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 10 முதல் 18 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தற்போது நிலவும் தட்பவெப்பசூழ்நிலையில் காய்கறிப்பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, இலைப்பேன் வெள்ளை ஈ மற்றும் பல வகையான மாவுப் பூச்சிகளின் நடமாட்டம் அதிகமாக வாய்ப்புள்ளது. இவற்றை 1 ஏக்கருக்கு 5 மஞ்சள் ஒட்டும் பொறி வைத்து கண்காணிக்கலாம். தேவைப்படின் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் அல்லது மீன் எண்ணெய் சோப்பு 25 கிராம் ஒரு லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம்.

- ✓ கரும்பில் தண்டு துளைப்பான் தாக்குதல் காணப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணியை வயல்களில் நட்ட 45 நாட்களில் இருந்து 15 நாள் இடைவெளியில் (2 சி.சி / ஏக்கருக்கு) 6 முறை விடவும்.
- ✓ கத்தரியில் பருவமழைக் காலங்களிலும் வானம் மேகமூட்டத்துடன் இருக்கும் சமயங்களிலும் இலைப்புள்ளி நோய் அதிகமாகக் காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த டைத்தேன் எம் 45 பூசண கொல்லியினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கலந்து 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.
- ✓ ஒரு எக்டருக்குத் தேவையான தக்காளி விதைகளை 40 கிராம் அசோஸ்பைரில்லம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். இவ்வாறு நேர்த்தி செய்யப்பட்ட விதைகளை 1 மீட்டர் அகலம் உள்ள மேட்டுப்பாத்திகளில் 10 ச.மீ வரிசை இடைவெளியில் விதைக்கவேண்டும். பிறகு மணல் கொண்டு மூடிவிட வேண்டும்.
- ✓ நிலவும் பருவநிலையில் வெங்காயப்பயரில் வெள்ளை நிற அடிச்சாம்பல் நோய் பரவலாக தென்படுகிறது. இந்நோயின் வளர்ச்சி இலையின் மேற்புறதத்தில் காணப்படும். முடிவில் இலைகள் காயந்துவிடும்.இதனைக் கட்டுப்படுத்த மேன்கோசெப் 0.2% மூன்று முறையும் நாற்று நட்டபின் 20 நாட்கள் கழித்தும், பின் 10-12 நாட்கள் இடைவெளி விட்டு திரும்பவும் தெளிக்க வேண்டும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 11°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 75 முதல் 90 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 16-18 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ நீலகிரி மாவட்டத்தில் மழை நாட்களில், தண்ணீர் தேங்குவதை தடுக்க தோட்டத்தில் உரிய வடிகால் வசதி செய்ய வேண்டும்.
- ✓ வானம் மேகமூட்டமாக இருப்பதால், மலை காய்கறி பயிர்களில் பூஞ்சான் தாக்குதல் பரவுவதற்கான வாய்ப்புகள் உள்ளது. எனவே நோய் பரவுவதை தடுக்க, சரியான பூஞ்சான் கொல்லிகளை பயன்படுத்த அறிவுறுத்தப்படுகிறது.

**5. வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் தென்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது பகல்நேர வெப்பநிலை 34°செ இரவுநேர வெப்பநிலை 24°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 35 முதல் 70 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 9 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தற்போது விதைக்கென சின்ன வெங்காயம் சாகுபடி செய்யும் பருவமாதலால் விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு தேவையான 500 கிலோ விதைக்குமிழ்களை விதை நேர்த்தி செய்து விதைப்பது அவசியம், விதை நேர்த்தி செய்ய ஒரு கிலோ வெங்காயத்திற்கு 4 கிராம் என்ற அளவில் டிரைக்கோடெர்மா விரிடியினை விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பு கலந்து நிழலில் உலர வைக்க வேண்டும். இவ்வாறு விதை நேர்த்தி செய்யப்பட்ட விதைக்குமிழ்களை 15x10 செ.மீ. இடைவெளியில் விதைப்பு செய்யவும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 27°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 40 முதல் 70 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 10 முதல் 18 கி.மீவேகத்திலும் வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ கால்நடைகளுக்கு அளிக்கக்கூடிய வைக்கோல், கேழ்வரகு தட்டு, சோளத்தட்டு, கம்பந்தட்டு உலர்ந்த நிலக்கடலை கொடி போன்றவையே 1-2 அங்குல அளவில் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி அத்துடன் 2% சாதாரண சமையல் உப்பு கரைசலை கலந்து அளிப்பதன் மூலம் தீவனம் வீணாவதை தடுக்கலாம்.
- ✓ கோழிப்பண்ணைகளில் தீவன தொட்டியை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை உயர்த்தி வைப்பதால் வெப்பத்தாக்கத்தை குறைக்கலாம்.
- ✓ கொட்டகையின் மேற்கூரையின் மீது தென்னங்கீற்று அல்லது வைக்கோல் பரப்பி அதன் மீது தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்பத் தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.
- ✓ ஆட்டு கொட்டகையின் தரையை 3 அல்லது 4 அங்குல அளவு மண்ணை மாற்றுவதன் மூலம் ரோய தாக்குதலிருந்து பாதுகாக்கலாம்.
- ✓ புறக்கடை கோழி வளர்ப்போர் கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் (இராணிகட்) தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்.
- ✓ நெற் தரிசு உளுந்து மற்றும் பச்சை பயிரில் மேல் சாம்பல் நோயினைக் கட்டுப்படுத்த 5% வேப்பங்கொட்டைச் சாறு கரைசல் அல்லது ஏக்கருக்கு 400 கி மேன்கோசெப் அல்லது 1 கிலோ நனையும் கந்தகத்தூளை காலை அல்லது மாலை வேளையில் தெளிக்கவும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 32°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 65 முதல் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 12-14 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ புதிதாக நடவு செய்யப்பட்ட பழவகை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும்.
- ✓ தென்னை மரத்தில் 10 செ.மீ உயரத்தில் தென்னை நார் கழிவுகளை இடவும்.
- ✓ காய்கறி பயிர்களுக்குபோதுமான அளவு நீர் பாய்ச்சவும்.
- ✓ அன்னாசி வயல்களில் மூடாக்கு இடுவதன் மூலம் மண்ஈரப்பதம் வீணாகாமல் தடுக்கலாம்.
- ✓ வாழையில் காய்ந்த மற்றும் நோய் தாக்கிய இலைகளை அகற்றுவதன் மூலம் இலைப்புள்ளி நோய் பரவுதலை கட்டுப்படுத்தலாம்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம்,கோவை**